# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**

**முனைவர் சு. இராமலிங்கம்**

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

61. **இரா. வாணிபிரபா** 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. **முனைவர். மு. ருக்மணி** 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. **வே. அம்சவேணி** 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில் சித்தாந்தக் கூறுகள்

64. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. **முனைவர் ஆ. சரவணன்** 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. **முனைவர். நா. கீதா** 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. **முனைவர் எஸ். குமரன்** 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

68. **முனைவர் த.பிரியா** 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும் கவிதையனுபவம்

69. **மு. ஷாஜஹான்** 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும் இடந்தலைப்பாடும்

70. **இரா. மாலினி** 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபதக் கதை மாந்தர்கள்

71. **முனைவர் இரா. மணிமேகலை** 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. **முனைவர் ச. கவிதா** 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. **முனைவர் கு. முத்துக்குமார்** 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. **வெ. மைதிலி** 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. **முனைவர் சு. சதீஷ்குமார்** 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

# 65. ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

முனைவர் ஆ. சரவணன்
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

## முன்னுரை

ஒரு ஜீவான்மாவானது இவ்வுலகை விட்டு நீங்கியதும், ஏற்கனவே செய்துள்ள பாவ புண்ணியங்களுக்குச் சேர நரகத்தையோ, சுவர்க்கத்தையோ மீண்டும் பிறப்பையோ, பரம பதத்தையோ அடைகிறது. இந்த ஜீவாத்மா நகரத்திற்குச் செல்லும் வழிக்கு 'யாமயகதி' என்றும், சுவர்க்கத்திற்குச் செல்லும் வழிக்கு 'தூமகதி' என்றும், பரமபதத்திற்குச் செல்லும் வழிக்கு 'அர்ச்சிராகதி' என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.

'அர்ச்சி' என்ற வடமொழிச் சொல்லிற்கு சூரியன் என்று பொருள். பரமபத்திற்குச் செல்லும் வழியில் முதலில் ஜீவாத்மா கடக்க வேண்டியது சூரியனாகிய வாசலை. ஆகையால் இவ்வழி அர்ச்சிராகதி என்று வழங்கப் பெறுகிறது. அவ்வகையில் டாக்டர் ந.சுப்புரெட்டியாரின் 'அர்ச்சிராகதி' எனும் நூல் குறித்து இவ்வாய்வு அமைகிறது.

## அர்ச்சிராகதிக்குரிய முதல் நிலை

திருமகள் கேள்வனான சர்வேசுவரனுக்கு நித்திய விபூதி (பரமபதம்), லீலாவிபூதி (இப்பூவுலகம்) என்ற இரு விபூதிகள் அடிமையாக இருக்கும். அவற்றுள் பெரிய பிராட்டியாரும் எம்பெருமானும் களித்து வாழ்கின்ற நித்திய விபூதியிலுள்ளவர்கள் அவனுடைய இச்சைக்கு இசைந்து நடப்பர். ஆனால் இந்த லீலாவிபூதியிலுள்ளவர்கள் அவனது சங்கற்பத்தை அநுசரித்து அறிவிலராய் அவனை அகல்வதற்கு காரணமானவற்றையே செய்து கொண்டிருப்பார். "இரண்டாகப் பிளந்து விழுந்தாலும் விழுவனேயொழிய இவ்வாறு வணங்கமாட்டேன். இ்.து என் உடன்பிறந்த குற்றம். அவரவர் சுபாவம் மீற முடியாதன்றோ" என்றும், "நானே ஈசுவரன்; நானே போகங்களை அனுபவிப்பவன்; சுகமுடையவனும் நானே" என்றும் இருப்பவர்கள் லீலா விபூதியிலுள்ளவர்கள்.

"சீவனுடைய மரண காலத்தில் அடியவனோடு கூடியவர்கட்கு, இந்திரியம் மனத்தோடு சேர்ந்து, மனம் பிராணனோடு சேர்ந்து, பிராணன் சம்பந்தித்து, இவன் பூதசூக்கும விசிஷ்டனாய் பரமான்மாவின் பக்கலிலே சேர்வான்" வெகுதூரம் நடந்தால் பசி தாகங்களால் மயக்கமடைந்த சீவனுக்குத் தாமரைக் கண்ணனின் திருநாம